**கடுவன பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவன பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கடுவன பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டு இருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 37,814,706 இற்கான 20 நிர்மாண வேலைகளுக்காக கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்காமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் அதே பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | மத்திய அரசின் ஏற்பாடுகள் மீது நிறைவேற்றப்பட்டிருந்த இந்த நிர்மாண வேலை 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் என கணக்கீடு செய்யப்படவில்லை எனவும் | கடன்கொடுத்தோர் ஒதுக்கங்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் மூலம் நிதி விளைவுகளுக்கு பாதிப்பு ஒன்று ஏற்பட்டிருக்கவில்லை என. | |
| (ஆ) | 1994 இன் 04 ஆம் இலக்க தென் மாகாண முத்திரைக் கட்டண திருப்புதல் நியதிச் சட்டத்தின் பிரகாரம் சபைக்கு கிடைக்காத 2015, 2016 மற்றும் 2019 ஆண்டுகளுக்குரிய தாமதக் காலம் 02 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 6,475,245 இற்கான முத்திரைக் கட்டணம் பெற வேண்டிய வருமானம் ஒன்று என மிகையாக கணக்கீடு செய்திருந்தது. | தேவையான அங்கீகாரம் பெற்றுக் எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 27 திகதி கிடைத்திருந்த ரூபா 3,200,000 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்கப்பெறல், பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்திற்கு சீராக்கல் செய்யப்படாமையால் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த இந்த பணம் தொடர்பாக சபை 2022 ஆண்டில் அறிந்த பின்னர் பற்றுச்சீட்டொன்று வழங்கி இருந்தமையால் 2022 ஆண்டில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொருட் பதிவேட்டுப் பொருட்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 1,797,291 தொகைக்கான 88 பொருட் பதிவேட்டு அலகுகள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர இயந்திர உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தி இருந்தமையால் நடைமுறையல்லாத சொத்துக்கள் அதே பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கிரம நகரத்தில் ATM இயந்திரம் ஒன்று பொருத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 305,769 தொகை கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்து மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிராப்பரிடம் கையில் மீதி ரூபா 265,021 தொகை நிதிக் கூற்றுக்களில் கையில் காசு என காட்டப்படாமல் வங்கி மீதியுடன் கூட்டி காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கையில் காசு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் போது ரூபா 211,220 தொகைக்கான மூலதனச் செலவுகள் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை | செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மூலதனச் செலவுகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எடுப்பேன். | கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது சபையின் நிரந்தர பதவியணியினருக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த மந்திரிமார் கொடுப்பனவு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து ரூபா 137,044 தொகை மிகையாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த செலுத்த வேண்டிய மீதியொன்று என கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 28,119,979 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,451,482 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **வாடகை** | | |
| i. | மீளாய்வாண்டிற்காக 20 கடை அறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 728,397 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாவிடின் சட்டநடவடிக்கை எடுப்பேன். | பெறுமதி கூடிய நிலுவைத் தொகைகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெளித் தரப்பினர்கள் மற்றும் சங்கங்களில் இருந்து பெற வேண்டிய வாகன வாடகை ரூபா 770,040 தொகை மற்றும் ரூபா 107,660 தொகைக்கான டென்டர் வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2013 ஆண்டு முதல் காணப்படும் வாகன வாடகை மீதியை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், ரூபா 90,750 இற்கான டென்டர் வாடகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், ரூபா 16,910 தொகையினை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்திற்காக | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| iii. | 2018 ஆண்டின் போது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 08 கடையறைகள் தொடர்பாக ரூபா 8,330,000 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஒரே முறையில் பெறும் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iv. | 2018 ஒக்தோபர் 01 திகதி மித்தெனிய ராஜபக்ஷ சிறப்பு வர்த்தக தொடர் கட்டிடத்தில் 10 கடையறைகளை வாடகைக்கு பெற்றிருந்த தரப்பினரினால் உடன்படிக்கையின் 2.1 பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொண்ட நாள் முதல் 04 மாதங்களுக்குள் கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்காக இணங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அந்த அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உடன்படிக்கையின் பிரிவு 2.23 இன் படி வாடகைக்கு கொடுக்கப்பட்ட கடையறைகளை மீண்டும் சபைக்கு உரித்தாக்குவதற்கு முகாமையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022.06.23 திகதிய சபைத் தீர்மானத்தின் படி வாடகையாளருடன் எதிர்காலத்தில் கலந்துரையாடி அதில் எடுக்கப்படும் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுப்பேன். | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 3897 நீர் நுகர்வோரிடம் பெற வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 9,749,818 தொகையினை அறவீடு செய்வதற்காக நீர் நுகர்வோருடன் | நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் மற்றும் சீரற்ற பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பொது மக்களின் நெருக்கடிகளை குறைக்கும் | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அணுகியிருந்த உடன்படிக்கையின் 11 ஆவது பிரிவின் படி செயற்படுவதற்கு சபை போதியளவு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், மீதித் தொகையில் ரூபா 474,438 தொகை 03 அரச நிறுவனங்களிடம் இருந்து பெற வேண்டியவையாக காணப்பட்டது. | குறிக்கோளுடன் நீர்த் துண்டிப்பு ஏற்படுத்தவில்லை என அறிவிக்கின்றேன். | |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரணசிங்கொட முன்பள்ளியை சுற்றி வலை வேலி பொருத்தும் நிர்மாணவேலை தொடர்பாக வலைகள் மற்றும் ஜீ.அய். குழாய்கள் பொருத்துவதற்காக மிலிமீற்றர் 20x60 அளவான தட்டை இரும்பு சட்டகம் ஒன்று போடப்பட வேண்டியிருந்த போதிலும் அந்தக் கருமம் நிறைவேற்றப்படாமல் இருக்கும் போது ரூபா 469,908 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் நிதிப் பிரமாணம் 237(அ) (I) மற்றும் (III) இன் படி ஒப்பந்தவேலை கொடுப்பனவுகளின் போது மற்றும் தடுத்து வைத்தல் பணம் செலுத்தும் போது உடன்படிக்கை மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் குறிப்பிட்ட நிர்மாணவேலை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தி பரிந்துரை வழங்கப்படல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த நிர்மாணவேலை உடன்படிக்கை மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்காத போது தொழிநுட்ப உத்தியோகத்தரினால் அவ்வாறு நிறைவேற்றப்பட்டிருந்தது என குறிப்பிட்ட போலியான கொடுப்பனவு அறிக்கை தயாரித்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயற்திட்டத்திற்காக மிகையாக செலுத்தியிருந்த தொகையினை அறவீடு செய்வதற்காக மற்றும் போலியான கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |